**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.CC.No.112/2020**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.எழிலரசன் Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரசுராமன் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ராமசாமி | சமயம் | : |
| கிராமம் | : பொன்பத்தி | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 40 |

**( 1, 2, 3 எதிரிகள் ஆஜர். )**

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 - 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**முதல் விசாரணை**

**1.** நான் பொன்பத்தி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 அம்மணி எனக்கு அம்மா. பட்டியல் சாட்சி 3 ஜெயக்குமார் என்னுடைய தம்பி. ஆஜர் எதிரிகள் என்னுடைய பக்கத்து நிலத்துக்காரர்கள்.

2. கடந்த 29.01.2018 ந் தேதி மாலை 5 மணி முதல் 6 மணிக்குள்ளாக எங்களது கழனியில் இருந்தபோது சண்டை நடந்தது. 1ம்எதிரி அன்பழகன் அன்றைய தினம் கொடுவா கத்தியால் எனது மண்டையில் வெட்டினார். அப்போது எனது தம்பி ஜெயக்குமார் வந்து தடுத்தார். அப்போது எனது தம்பி ஜெயக்குமாரை 2ம்எதிரி அரிகிருஷ்ணன் கட்டையால் அடித்துவிட்டார். அப்போது பூங்காவனம் உடனிருந்தார். 3 பேரும் சேர்ந்து கொண்டு எங்களை வெட்டி போட வேண்டும் என்று சொன்னார்கள். அடிபட்ட நாங்கள் கீழே விழுந்து விட்டோம். ஆஜர்எதிரிகள் மூவரும் எட்டி எட்டி உதைத்தார்கள். எங்களுக்கு ரத்தம் கொட்டியது. காயம்பட்ட நானும், என் தம்பியும் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். என் தம்பிக்கு முகத்தில் காயம்பட்ட இடத்தில் தையல் போட்டார்கள். தலையில் காயம்பட்ட எனக்கும் தையல் போட்டார்கள். எனக்கு மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். அதன்படி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் 1 வாரம் தங்கி சிகிச்சை எடுத்துவிட்டு வந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை:**

நானும், எனது தம்பி ஜெயக்குமாரும் ஊரோடு விவசாயம் வேலை செய்து கொண்டு இருக்கிறோம் என்றால் சரியல்ல. தற்சமயம் ஊரிலே தங்கி விவசாயம் செய்து வருகிறேன். 1ம் எதிரி அன்பழகன் தையல் வேலை செய்துகொண்டு அவ்வப்போது ஊருக்கு வந்து செல்வார் என்றால் தற்போதுதான் சென்னைக்குபோய் உள்ளார். சம்பவம் நடந்த போது ஊரில் தான் இருந்தார். எனக்கும் எதிரிகளுக்கும் என்ன முன்விரோதம் என்றால் நில சம்மந்தமாக முன் விரோதம். அரிகிருஷ்ணனின் தம்பி தாமோதரனிடம் நான் நிலம் வாங்கினேன் என்றால் 40 செண்ட் வாங்கினேன். நான் வாங்கிய 40 செண்ட் நிலத்திற்கு அருகில் ஏரி கால்வாய் போகிறது என்றால் ஏற்கனவே இருந்தது. தற்போது இல்லை. ஏரிக்கால்வாய் இருந்தபோது அதில் சென்ற தண்ணீரை எதிரிகள் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. 20 வருடத்திற்கு முன்பாக அந்த கால்வாய் மூடப்பட்டு விட்டது. ஆஜர் எதிரிகள் நிலம் வாங்கிய பிறகு அந்த கால்வாயை நான் தான் மூடிவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த கால்வாய் ஏரி மதுவாயில் இருந்தே மூடிவிட்டார்கள். சம்பவம் நடந்த காலையில் எங்கிருந்தேன் என்றால் மாடு கட்டுவதற்கு நிலத்திற்கு சென்றிருந்தேன். சம்பவம் நடந்த அன்றைய தினம் களை பறித்து கொண்டிருந்தேனா என்றால் மாலை 5 மணிக்கு களை பறித்து முடிந்துவிட்டது. அப்போது நானும், எனது தம்பி மட்டும் இருந்தோமா என்றால் எங்களுடன் கழனியில் எனது அம்மா தூரமாக இருந்தார். சண்டை எங்க அம்மாவுக்கு தெரியாது என்றால் சத்தம் கேட்டு ஓடிவந்தார்கள். எனது அம்மா வந்து சண்டையை தடுத்தார்களா என்றால் என் அம்மா வந்து எங்களை தூக்கும்போது எதிரிகள் அங்கிருந்து சென்றார்கள். எனது அம்மாவை ஆஜர் எதிரிகள் திட்டினார்களா என்றால் திட்டினார்கள். எனது அம்மாவை அடித்தார்களா என்றால் இல்லை. என்னை அடித்தபிறகு சுயநினைவு எனக்கு இல்லை என்றால் அரைகுறையாக இருந்தது. சண்டை சமயத்தில் எதிரிகள் தன்னுடைய நிலத்தில் வேர்க்கடலை போட்டிருந்தார்கள் என்றால் ஆமாம். எதிரிகள் தனது நிலத்தில் அமர்வதற்கு கல் வைத்து கொட்டகை போட்டிருந்தார்கள் என்றால் ஆமாம். அடிபட்ட வுடன் காவல் நிலையம் சென்றேனா என்றால் மருத்துவமனை சென்றேன். செஞ்சி அரசு மருத்துவமனையில் எத்தனை நாள் இருந்தேன் என்றால் அங்கு முடியாது என்று சொன்னதால் அன்றே மேல்சிகிச்சைக்காக சென்றேன். எனது தம்பி செஞ்சி அரசு மருத்துவமனையில் எத்தனை நாள் இருந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது யார் என்றால் என் அம்மா கொடுத்தார். எப்போது புகார் கொடுத்தார் என்றால் அடிப்பட்ட என்னிடம் போலிசார் விசாரித்தபோது என்னை ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டார்கள். முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னிடம் வாக்குமூலம் கேட்டு வாங்கினார்களா என்றால் நான் முடியாத நிலையில்

இருந்தேன். அரைகுறை சுயநினைவோடு இருந்தேன். செஞ்சி அரசு மருத்துவமனையில் போலிசார் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் போன் மூலம் வாக்குமூலம் வாங்கினார்கள். சம்பவம் பற்றி என் அம்மாவுக்கு நேரடியாக தெரியாது என்றால் நேரடியாக தெரியும். எங்களை தாக்கிய கத்தி, தடியை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் காயம்பட்ட நாங்கள் மருத்துவமனைக்கு தான் வந்தோம். ஆஜர் எதிரிகள் கொட்டகையில் சென்று அவர்களை அடிக்க முற்பட்டபோது அங்கிருந்த கல்லில் விழுந்ததில் எனக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. என்னை தாக்குவதற்கு முன்பாகவே எங்களுக்கும்எதிரிகளுக்கும் பலமுறை சண்டை நடந்துள்ளது என்றால் நடந்துள்ளது. அவ்வாறு சண்டை நடக்கும்போதெல்லாம் பஞ்சாயத்து பேசுவோம் என்றால் இல்லை. எனது மச்சான் அருணாச்சல நரசிம்மன் என்பவர் வழக்கறிஞராக உள்ளார் என்றால் ஆமாம். மருத்துவமனையில் கத்தி, தடியால் அடித்துவிட்டதாக சொன்னேனா என்றால் ஆமாம். 1ம்எதிரி அன்பழகன் இல்லாத நேரத்தில் 2, 3 எதிரிகளிடம் வீண் தகராறு செய்து அடிப்பேன் என்று எதிரிகள் சொல்கிறார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போதும் நானும், தம்பியை எதிரிகளை அடிக்க போகும்போது கல்லில் தவறி விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் தாக்கியதால் தான் எனக்கு காயம் ஏற்பட்டது. தவறாக என் தாயார் கொடுத்த பொய் புகாருக்குஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை:**

**இல்லை**

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.